**நியாகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 அக்டோபர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, நியாகம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மிகையாகச் செலுத்திய சம்பளக் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 219,121 இற்கான நிதிக் கூற்றுகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன உதவி பெறுவனவுகள் ரூபா 242,098 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை 12,507,305 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத் தொகை ரூபா 1,211,550 தொகைக்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்ட்டிருந்த அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 7,498,134 இற்கான மீதியினை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் போது ரூபா 6,929,001 தொகைக்கான செலவினக் கடன் கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போது ரூபா 17,065,803 தொகை வரை அதிகரித்திருந்ததுடன், அதில் அடங்கியுள்ள ரூபா 15,954,942 தொகைக்காக நிர்மாணவேலை கடன் கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டு இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 96,231,342 தொகை தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகளும், கூட்டுத்தொகை ரூபா 244,741 தொகைக்கான புரழ்வு வரி மற்றும் முத்திரை கட்டணம் தொடர்பான அட்டவணைகள், ரூபா 41,650 தொகைக்கான ஓவஸியரின் வெளிகலக் களஞ்சியம் தொடர்பான இருப்புப் பதிவேடு என்பன சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாகப் பரிசோதனை செய்வதற்கு முடியாதுள்ளது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை பகிஷ்கரிக்கும் நபர்கள் தொடர்பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடைசெய்யும் எழுத்தாணை அட்டவணை என்பன தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி 180 முதல் 184 வரை | சபையின் பணம் ,கலஞ்சிய விடயங்கள் தொடர்பாக கடமைகள் ஆற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான சேகரிப்பு விடயங்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் 18 பேரிடம் பிணைப் பணம் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 | பொது வைப்புக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்த 02 வருட காலத்தை விஞ்சியுள்ள ரூபா 934,300 இற்கான 39 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,861,355 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,113,739 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,252,384 இற்கான வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது.

## 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுகளின் நிலைமைகளுடன் மீளாய்வாண்டின் நிலைமை இணக்கஞ் செய்த போது நடைமுறை விகிதாசாரத்தில் மற்றும் விரைவு விகிதாசாரத்தில் வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது என அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 915,352 தொகைக்கான வீதவரி தொகையில் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது ரூபா 487,393 தொகை எனப்படும் 53 சதவீதமாகும்.

### 2.3.2 வாடகை

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 592,006 இற்கான நிலுவை வாடகை மீதியில் ஆண்டின் போது ரூபா 99,380 தொகை எனப்படம் 17 சதவீத மாத்திரம் அறவிடபட்டிருந்தமையால் வருட இறுதி அளவில் நிலுவை ரூபா 492,626 தொகை ஆக இருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 2,345,054 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 11 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும், 08 மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சம்பளமற்ற விடுமுறைகளுக்காக ரூபா 30,896 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) சபையினால் பேணப்படுகின்ற மூன்று வங்கி கணக்குகளில் 2016 ஆண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 18,023,710 இற்கான மாதாந்த சராசரி மீதியொன்று காணப்பட்டதுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 131 இன் பிரகாரம் பிரதேசசபை நிதியத்தில் இருந்து ஒரு தொகையினை முதலீடு செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், அதற்கு இணங்க செயற்படாமையினால் உழைக்க கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை இழந்துள்ளது.

**(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் பயன்படத்தப்படும் 4 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபையினால் பயன்படுத்தப்படும் டிரக்டர் வண்டி தொடர்பான ஆவணங்கள் ஏதும் சபையில் காணப்படாததுடன், பதிவு இலக்கமும் காணப்படவில்லை.

(iii) சபையினால் தற்போது பயன்படுத்தப்படாத 03 வாகனங்கள் தொடர்பாக நிதி அமைச்சின் 2015 ஜுலை 10 திகதி 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு திறமையின்மை

சபைக்கு சொந்தமான சந்தை தொகுதியினை வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 73,306 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அதேபோல 03 கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகளை அகற்றுவது தொடர்பாக பரிசோதனை மேற் கொண்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் செயற்படுத்தப்படுகின்ற சேதன உர செயற் திட்டம் அந்த பகுதியில் வாழும் மக்களின் எதிர்பின் காரணமாக 2015 ஜுன் மாதம் முதல் நிறுத்தப்பட்டிருந்தது. குப்பை செயற்களத்தை 2016 ஆண்டின் போது இடி தாக்கியதன் காரணமாக கட்டிடத்திற்கு மற்றும் அங்கு பொருத்தப்பட்டிருந்த இயந்திர பொறிகளுக்கு சேதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) தற்போது சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை வகைப்படுத்தி, உக்கக் கூடிய குப்பைகளை ரூபா 5000 மாதாந்த வாடகை செலவிடப்பட்டு தனியார் கம்பனி ஒன்றிற்கு சொந்தமான தோட்டமொன்றில் குவிக்கப்பட்டுள்ளது. உக்காத பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் தனியார் முயற்சியாளர் ஒருவருக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன் மீதியாக உள்ள திண்ம கழிவுப் பொருட்களை பைகளில் நிரப்பி சேதனப் பசளை செயற்களத்தின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) திண்ம கழிவு பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடங்கியுள்ள ஒரு செலவு விடயத்தில் ரூபா 433,265 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டுள்ளது. 05 செலவு விடயங்களில் ரூபா 23,441,584 இற்கான சேமிப்பு காணப்பட்டதுடன் மேலும் 02 செலவு விடயங்களில், ரூபா 789,610 அங்கீகரித்த எல்லையினை மிகைத்து செலவிடப்பட்டுள்ளது. 07 வருமான விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 22,076,846 இற்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுபாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்துதல்**

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள் | (i) சில வருமானங்கள் மிகையாகவும் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. |
| | (ii) நாட்குறிப்புக்கள் அச்சுப் பிழைகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் வகுப்பு அடிப்படையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) வருமானங்கள் சேகரித்தல் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதில் முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தி யிருக்கவில்லை. |
| | (ii) நிலுவை வருமானம் தொடர்பாக காலப் பகுப்பாய்வு ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| | (iii) நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் இற்றைவரை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) பணிப்பாளர் குழு முகாமைத்துவம் | (i) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 8 பேர்கள் மிகையாகக் காணப்பட்டன. |
| | (ii) 11 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | சம்பளமற்ற விடுமுறைக்காக அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | வாகன நிருவாகம் | (i) | சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்படவில்லை. |
| | | (ii) | பயன்பாட்டுக்கு ஈடுபடுத்தப்படாத 03 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | 04 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | செலவு விடயமொன்றில் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. |
| | | (ii) | 5 செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டதுடன், மேலும் 2 செலவு விடயங்களின் எல்லையினை மிகைத்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | | (iii) | 07 வருமான விடயங்களில் வருமான இலக்கினை நெருங்கியிருக்கவில்லை. |